TNJR

Reg.No.

# இரண்டாம் பருவ பொதுத் தொகுத்தறித் தேர்வு - 2019

காலம்:2.00 மணி வகுப்பு - 7 மதிப்பெண்கள்: 60

## தமிழ்

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 14 x 1 = 14

அ) உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுது.

1. உரவுநீர் அழுவம் - இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் ................
   அ) காற்று ஆ) வானம் இ) கடல் ஈ) மலை
2. கல்வியில்லாத நாடு ............. வீடு.
   அ) விளக்கில்லாத ஆ) பொருளில்லாத இ) கதவில்லாத ஈ) வாசலில்லாத
3. எழுத்து + ஆணி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..........
   அ) எழுத்துஆணி ஆ) எழுத்தாணி இ) எழுத்துதாணி ஈ) எழுதாணி
4. தொல்காப்பியம் கடற்பயணத்தை ............. வழக்கம் என்று கூறுகிறது.
   அ) நன்னீர் ஆ) தண்ணீர் இ) முந்நீர் ஈ) கண்ணீர்

ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக:

5. அகநானூறு ......................... எனவும் அழைக்கப்படுகிறது.
6. கலம்காரி ஓவியம் என்று அழைக்கப்படுவது .........................
7. கப்பல் ஓரிடத்தில் நிலையாக நிற்க உதவுவது .........................
8. நன்னூலின்படி தமிழிலுள்ள ஓரெழுத்து ஒரு மொழிகளின் எண்ணிக்கை .........................

இ) பொருள் எழுதுக.

9. நீகான் -
10. வனப்பு -

ஈ) பொருத்துக.

11. எண்ணித் துணிக - முதனிலை திரிந்த தொழிற்பெயர்
12. சூடு - அடிமரம்
13. கழனி - செயல்
14. ஏரா - வயல்

II. ஏதேனும் ஆறு வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளி: 6 x 2 = 12

15. கலங்கரை விளக்கில் எந்நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்?
16. நாவாயின் தோற்றம் எவ்வாறு இருந்ததாக அகநானூறு கூறுகிறது?
17. கல்விச்செல்வத்தின் இயல்புகளாக நாலடியார் கூறும் செய்திகளை எழுதுக.
18. தமிழ் மொழிக்கல்வி பயில்வதால் உண்டாகும் நன்மைகள் எவையெனப் பாரதிதாசன் குறிப்பிடுகிறார்?
19. துன்பத்திற்குத் துன்பம் உண்டாக்குபவர் யார்?
20. தாய்மையின் ஓவியத்தில் நிறைந்திருக்க வேண்டியவை யாவை?
21. கப்பல் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக
22. கல்வி அறிவு இல்லாதவர்கள் பற்றி வள்ளுவர் கூறுவது யாது?
23. நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?
24. ஓவியங்களின் வகைகள் யாவை?
25. சுவர் ஓவியங்கள் காணப்படும் இடங்களைக் கூறுக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**III. ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி: 3 x 2 = 6**

26. இயற்சொல்லின் நான்கு வகைகள் யாவை?
27. மண், பொன் என்பன எவ்வகைச் சொற்கள்?
28. ஒரெழுத்து ஒருமொழி என்றால் என்ன?
29. பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
30. முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 2 x 5 = 10**

31. கீரைப்பாத்தியும் குதிரையும் எக்காரணங்களால் ஒத்திருக்கின்றன? (அல்லது)
இன்பத்தமிழ்க் கல்வி - பாடலின் மையக்கருத்தை உங்கள் சொந்த நடையில் எழுதுக.
32. பண்டைத் தமிழரின் கப்பல் செலுத்தும் முறை பற்றி எழுதுக. (அல்லது)
கல்வியையும் விளக்கையும் திருக்குறளார் எவ்வாறு ஒப்பிடுகிறார்?

**V. அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 2 x 5 = 10**

33. 'ஆழ்கடலின் அடியில்' என்னும் கதையைச் சுருக்கி எழுதுக. (அல்லது)
மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக.
34. உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத்தர வேண்டி நூலக ஆணையருக்குக் கடிதம் எழுதுக.
(அல்லது)
கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.
முன்னுரை - அமைவிடம் - பெயர்க்காரணம் - தொழில்கள் - சிறப்புமிகு இடங்கள் - திருவிழாக்கள் - மக்கள் ஒற்றுமை - முடிவுரை

**VI. அடிமாறாமல் எழுதுக: 4 + 2 = 6**

35. 'வைப்புழிக் கோட்படா' எனத் தொடங்கும் 'அழியாச்செல்வம்' பாடலை எழுதுக.
36. 'அறிவு' என முடியும் குறளை எழுதுக.

**VII. கலைச்சொல் தருக: 2 x 1 = 2**

37. Anchor
38. Cartoon

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com